**OS.132/2024**

**நாள்.** 17.03.2026.

**வா.சா. 1 – சத்தியராஜ்**

<u>1 முதல் 3 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>

சர்வே எண்.119/6 ல் கண்ட மொத்த சொத்தானது 119/6 ஏ, 119/6 பி என உட்பிரிவாகியிருந்தாலும் ஸ்தலத்தில் ஒரேசொத்தாக உள்ளதா அல்லது இரண்டு சொத்துக்களாக உள்ளதா என்றால் இரண்டு சொத்துகளாக உள்ளது. நான் கிரையம் பெற்ற பிறகு 12.08.2024 ம் தேதி இராமநாதபுரம் வட்டாட்சியரிடம் உட்பிரிவு செய்து பட்டா வழங்கும்படி மனுகொடுத்தேன் என்றால் சரிதான். இராமநாதபுரம் வட்டாட்சியர் நான் கொடுத்த மனுவின் அடிப்படையில் சர்வே செய்து 119/6 ல் கண்ட சொத்தை 119/6 ஏ 1, 119/6 ஏ 2 என உட்பிரிவு செய்து 119/6 ஏ 2 ல் கண்ட சொத்திற்கு என் பெயரில் பட்டா வழங்குமாறு உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரிதான். அந்த உத்தரவு என்னிடம் காட்டப்படும் உத்தரவு என்றால் சரிதான். அந்த உத்தரவு **பி.வா.சா.ஆ.1**. என்னிடம் காட்டப்படும் 10(1) சிட்டா சர்வே எண்.119/6 ஏ 2 க்குரியது என்றால் சரிதான். அந்த சிட்டா **பி.வா.சா.ஆ.2**. பி.வா.சா.ஆ.2 மூலம் என் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.119/6 ஏ 1 க்கு பொன்னம்மாள் மற்றும் 5 நபர்கள் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சிட்டா பொன்னம்மாள் மற்றும் 5 நபர்களுக்கு வழங்கப்பட்ட சிட்டா என்றால் சரிதான். அந்த சிட்டா **பி.வா.சா.ஆ.3**. என்னிடம் காட்டப்படும் புலப்படத்தில் உள்ளவாறுதான் சர்வேஎண்.119/6 ஏ மற்றும் 119/6 பி உள்ளது என்றால் சரிதான். அந்த புலப்படம் **பி.வா.சா.ஆ.4**. சர்வே எண்.119/6 ஏ உட்பிரிவு செய்யப்பட்ட பிறகு என்னிடம் காட்டப்படும் புலப்படத்தில் உள்ளவாறுதான் சர்வே எண்.119/6 ஏ 1 உள்ளது என்றால் சரிதான், **பி.வா.சா.ஆ.5**. ஆனால் உட்பிரிவு எனக்கு வரைபடம் கொடுக்கப்படவில்லை. எனக்கு சர்வேஎண்.119/6 ஏ என உட்பிரிவு செய்து பட்டா வழங்கியபோதிலும் புலப்படத்தில் அவ்வாறான உட்பிரிவு ஏற்படவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.119/6 ஏ 1 ல் கண்ட சொத்து புலப்படத்தில் உள்ளவாறு ஒரேசொத்தாக உள்ளதா அல்லது தனித்தனி சொத்தாக உள்ளதா என்றால் ஒரேசொத்தாக உள்ளது. சர்வே எண்.119/6 ஏ 1 ல் பனைமரங்களும் மற்ற மரங்களும் உள்ளது என்றால் சரிதான். சர்வே

எண்.119/6 ஏ 1 ல்தான் பொன்னம்மாளின் மகனும், 1ம் பிரதிவாதியின் கணவருமான காளிமுத்தன் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ளது என்றால் அவர் வாங்கிய 67 சென்டுக்குள் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. அந்த 67 சென்டு சர்வே எண்.119/6 ஏ 1 ல் உள்ளதா என்றால் உள்ளது. நான் காளிமுத்தனின் சமாதியைத்தான் பிராதுடன் தாக்கல் செய்த வரைபடத்தில் (வா.சா.ஆ.1) ABCD என காண்பித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு சர்வே எண்.119/6 ஏ 2 என வழங்கப்பட்ட பட்டா ரத்து செய்யப்பட்டுவிட்டதா என்றால் ஆமாம். எனக்கும், பிரதிவாதிகளுக்கும் பிரச்சனையானதால் பிரதிவாதிகள் கொடுத்த மனுவின்பேரில வட்டாட்சியர் எனக்கு கொடுத்த பட்டாவை ரத்து செய்துவிட்டார், நீதிமன்றத்தில் உரிய உத்தரவு பெற்று வந்தால் பட்டா வழங்குவதாக சொன்னார். அவ்வாறு பட்டாவை ரத்து செய்து எனக்கு உத்தரவு வழங்கினாரா என்றால் இல்லை. நான் கணினியில் தவறான வழியில் உட்பிரிவு செய்த விவரத்தை வட்டாட்சியர் தெரிந்து கொண்டு வட்டாட்சியர் தன்னிச்சையாக கணினியில் நீக்கம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்து அல்லாத வேறு சொத்தை கிரையம் பெற்றுக்கொண்டு, தாவா சொத்தில் உரிமைகோருவது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு பாத்தியமும், அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள உரிமைமாற்று ஆவணங்கள் எங்களது குடும்ப உறுப்பினர்களால் ஏற்படுத்திக்கொண்ட ஆவணங்கள் என்றால் சரிதான். அந்த ஆவணங்களில் கண்டுள்ள நான்குமால்கள் இந்த பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.